# வேலணை ஒன்றியம் – பிரித்தானியா
# VELANAI ONRIYUM - UK

## முதலாம் ஆண்டு விழா மலர்
## 1st Year Anniversary

**எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**

# VO - UK






**Saturday, 26th April 2014**
**South Ruislip Community Association**
**Deane Park, Long Drive**
**South Ruislip HA4 0HS**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஒன்றியம் – பிரித்தானியா

# VELANAI ONRIYUM - UK

## முதலாம் ஆண்டு விழா மலர்

## 1st Year Anniversary

**எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**

# VO - UK

**Saturday, 26th April 2014**

South Ruislip Community Association
Deane Park, Long Drive
South Ruislip
HA4 0HS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்த்தாய் வாழ்த்து

## முன்னிலை

1. செந்தமிழ்ச் செல்வியாந் தெய்வமடி யிவள்
   தேவர்கள் போற்றிடும் தெய்வமடி
   கொந்தலர் சோலையில் ஏழிசை கூவிடுங்
   கோமளப் பாவையிக் கொம்பரடி.

2. தென்றல் தவழ்ந்திடும் தென்பொதி கைமலை
   தேவியிவள் வந்து தோன்றுமிடம்
   கொன்றை யணிந்தவன் கோதில்சொற் பாவலர்
   கூடி வளர்த்திடுங் கோதையடி.

3. சிந்தா மணிதிருக் கோவை சிலம்புடன்
   செம்மை திகழ்மணி மேகலையே
   நந்தா வளையுயர் குண்டல மாவிவை
   நங்கை யணிந்திடும் நல்லணிகள்.

4. தெள்ளுந் திருக்குறள் முடிபுனைந்து நல்ல
   சேக்கிழா ரீந்தசெங் கோல்பிடித்தே
   அள்ளும் அகம்புற ஆக்கப் பெருக்குடன்
   அன்னை யிவளர சாண்டிருந்தாள்.

5. ஓங்கு மிமயத்தில் விற்பொறித்தா ளிந்த
   உலகம் முழுதும்பே ரொளிவிரித்தாள்
   தாங்கும் அறம்பல போற்றிவைத் தாளெங்கள்
   தாயிவள் மாண்பினைச் சாற்றுவமே.

6. ஆங்கில வாணரின் ஆய்வுக் கலையெலாம்
   அன்னை யுளங்கொள ஆக்கிடுவோம்
   ஓங்குஞ் சுதந்திர உண்மை யுணர்வினால்
   உலகினை யாளவுங் கண்டிடுவோம்.

7. வாழிய செந்தமிழ் வாழியவே கலை
   வண்மை கனிந்தென்றும் வாழியவே
   ஊழி பலபல சென்றும் உலையாத
   உண்மை ஒளியுடன் வாழியவே.

**வித்துவான் க. வேந்தனார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
# VO - UK
## செயற்குழு உறுப்பினர்கள் 2013-14



நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)

**வேந்தனார் இளஞ்சேய், வேலுப்பிள்ளை தவனேசன், அப்புத்துரை நோதனராஜா
நாகையா விசாகன், குமாரசுவாமி சிவகுமாரன், நடராஜா சிவராஜா, தியாகராசா கலைவேந்தன்,
முருகேசு ரத்னவேல், பொன்னம்பலம் சிறீதரன், சுந்தரம்பிள்ளை சிவச்சந்திரன், கந்தையா இராஜேஸ்வரன்,
தம்பிஐயா சிவபாலன்.**

இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)

**கலைவாணி தெய்வேந்திரன், பத்மாவதி அருள்ராஜ், சிந்து கயன்ராஜ், அம்பிகை சிவனேசநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from

Mr & Mrs. Yoganathan

JP & S Services Ltd

Texaco Weyhill Road, Weyhill, Andover, Hampshire SP11 0PH

Tel: 00 44 (0) 1264 771 911, Fax: 00 44 (0) 1753 630 792

With best Compliments from....

B&P Enterprises Ltd

361 Watling Street, Radlett, Hertfordshire WD7 7LB,

Tel: 00 44 (0) 1923 854 636, Fax: 00 44 (0) 1753 630 792

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டென்மார்க் சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை
# Saiva Tamil Kultur Organisan
Fyrre vænget-311. 7190 Billund Denmark

**தாயின் முகமும் தாய்மண் நினைவும்**
**தமிழர் மறப்பாரா எம்டூர்உறவுகள் மறப்பாரா..!?**

## வாழ்த்து..!

நம்மவர்களின், எம் தாய்மண் மைந்தர்களின் தாய்மண் பற்றுள்ள நல்லவர்களின் சிந்தனையால் செயற்பாட்டால் உருவாக்கப்பட்டதே "வேலணை ஒன்றியம்". பிரித்தானியா என்ற பெரும் தேசத்தில் கடந்த பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் எமது தாய்மண் மைந்தர்களான பெரும்தொகையான மக்கள் நமக்கென்ன என்றும் தமது குடும்பம் தம் பிள்ளைகள் என்ற குறுகிய சிந்தனையோடும், பிரதேசம் வட்டாரம் என்ற குறுகிய எல்லைகளோடும், வாழ்ந்து தமது தாய்த்தேசப் பணியில் தமது வாழ்க்கையின் பெரும் காலப்பகுதியை தொலைத்து விட்டு வாழும் நிலை கண்ட, பரந்த சிந்தனையோடு விரிந்த மனஎழுச்சியோடு சிந்தித்த ஒருசில உள்ளங்களின் எண்ணத்தில் பிறந்ததே எமது தாய் மண் மக்கள் நலன் கருதும் வேலணை ஒன்றியம் என்ற மக்கள் பணி முடிக்கும் மக்கள் சேவை, கருணை கொண்ட மாமன்றம். அதன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

மக்கள் சேவை மகேசன் சேவை, மக்கள் தொண்டு தாய் மண் சிறப்பு. எதிர்காலச் சந்ததியின் தாய் மண் பற்றிய சிந்தனையூற்று, தமிழ், தமிழர் என்ற பற்று போன்ற சிந்தனைச் செயல் செயற்பாட்டில் தொடங்கியதே இந்த அமைப்பு. இது ஒருவருட கால வளர்ச்சியில் மக்கள் பல பணிகளை, பல மக்கள் சேவையை, பொங்கல், சித்திரை வருடம் என்ற பெரும் கொண்டாட்ட தினங்களில் தாய் மண் மக்கள் மகிழ, அவர்கள் மனம் குளிர பணிமுடித்த செய்தி அறிந்து எமது மனமும் குளிர்கின்றது, மகிழ்கின்றது. நாங்கள் இங்கே வசதியோடு மகிழ்வோடு வாழும்போது எமது உதவியால் அங்கு வாழும் எமது உறவுகளும் ஏதோ சிறு அளவிலாவது எங்களால் எமது உறவுகளின் செயற்பாட்டால் அவர்களும் மகிழ்ச்சி அடைவது நமக்கும் சிறப்பு. எமது மனதுக்கும் இனிப்பு தருகின்றது.

இன்று ஐக்கிய இராச்சியத்தில் தமிழும் தமிழரும் எதிர்காலச் சந்ததியும் வளர்ச்சி காணுகின்றார் என்றால் .அது ஏதோ இப்படி பல அமைப்புக்கள் ஆங்காங்கே கூடி தம்பணியை செய்வதால்தான். இன்று இலண்டனில் பார்க்கும்போது எமது தமிழீழ தேசத்து ஒவ்வொரு ஊரும் ஊருக்கொரு அமைப்பு அதுவும் ஒன்றிணைந்து பரந்து தாய்மண் நோக்கிய செயற்பாடுகொண்ட அமைப்புக்களின் செயற்பாட்டால் வருடா வருடம் விழா நடாத்தி விழாவில் வரும் சிறுதொகை பணத்தைக் கொண்டு தாய்மண்ணில் பல செயற்திட்டங்களை உறவுகளின் தேவைகளை நிறைவு செய்கின்றது. அதுபோல் நாமும் எமது அமைப்பை வளர்த்து பலமாக்கி எமது பணிகளை தொடர எம்மிடையே ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு எமக்கிடையே கட்டாயம் தேவை என்பதை உணர்ந்து செயற்பட்டு சீரோடு சிறந்தோங்க வேண்டும் என்று வாழ்த்தியும். வெளியீடும் மலரும், சிறக்க வேண்டி நடாத்த இருக்கும் ஆண்டு விழாவும் சிறக்கவும் வேண்டி எதிர்காலத்தில் நல்ல பணிகளை செய்து மக்கள் தொண்டாற்றி சீரோங்கி வளரவும் என இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வுநேசமுடன் நம்பிக்கையோடு

ஸ்தாபகத்தலைவர்
வேலணையூர் பொன்னண்ணா-
டென்மார்க்
23-03-2014

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Members:** 2013-14

**Chairperson**
Mr V. Ilansei

**Secretary**
Mr T. Kalaiventhan

**Treasurer**
Mr P. Sritharan

**Assist. Chairperson**
Mr S. Sivachandran

**Assist.Secretary**
Mr K. Rajeswaran

**Assist. Treasurer**
Mr T. Sivapalan

**Committee Members**
Mr N. Visakan
Mrs A. Sivanesanathan
Mr N. Sivarasa
Mr M. Ratnavel
Mrs K. Theivendran
Mr T. Sivakumaran
Mrs P. Arulrajah
Mr V. Thavanesan
Mr A. Nothanarajah
Mrs C. Gajanrajh

## தலைவரின் உள்ளத்திலிருந்து

வேலணை ஒன்றியம் - பிரித்தானியாவின் முதலாம் அகவை நிறைவு விழா மலரில் உங்களுடன் ஓர் சில விடயங்களை பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன். காலத்தின் தேவை கருதியும், புலத்தின் தற்போதைய நிலையை உணர்ந்தும் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் ஓர் சில வேலணை மக்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டதே இவ் "வேலணை ஒன்றியம் - பிரித்தானியா" அமைப்பாகும். இன்று இவ்வொன்றியம் தனது முதலாவது அகவையை நிறைவு செய்து இரண்டாம் அகவையில் காலடி வைக்கின்றது. இதுவரை இவ்ஒன்றியத்தில் 82 குடும்பங்களைச் சேரந்த 168 மக்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளார்கள்.

இவ்வொன்றியம் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் வேலணை மக்களை ஒன்றிணைத்து ஓர் பலமான சங்கத்தை உருவாக்க விரும்புகின்றது. இப் பலத்தின் அடிப்படையில் புலத்தில் நம் வேலணையூரில், வறுமை நிலையில் கவனிப்பாரற்று கவலையுடன் வாழ்கின்ற நம் வேலணை மக்களுக்கு நீண்ட காலநோக்கில் பயனுள்ள உதவிகளைச் செய்திடும் எண்ணத்தில் தன் செயற்பாடுகளைச் செயற்படுத்தி வருகின்றது. இதற்காக நாம் வேலணையில் ஓர் கிளைச் சங்கத்தை தொடங்கியுள்ளோம். இக்கிளைச் சங்கம் கடந்த ஐப்பசி மாதத்திலிருந்து வேலணையில் ஒன்பது வட்டாரங்களையும் உள்ளடக்கிய 15 பேர் கொண்ட ஓர் செயற்குழுவை உருவாக்கி இயங்கி வருகின்றது.

இக்கிளைச்சங்கம் மூலம் நாம் கடந்த 12.01.2014 அன்று வேலணை முன் நிலைப்பள்ளியடியில் வைத்து வறுமை நிலையில் வாழ்கின்ற 10 குடும்பங்களுக்கு தைப்பொங்கல் உதவிப்பணமாக ரூபா 90,000 கொடுத்திருந்தோம். பின்பு இங்கு சேகரித்த உடு துணிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு கடந்த 05.04.2014 அன்று வேலணை சிற்பனை முருகன் ஆலயத்தில் வைத்தும் 07.04.2014 அன்று பள்ளம்புலம் இலந்தவனம் பிள்ளையார் கோயிலில் வைத்தும் வறுமை நிலையில் வாழும் மக்களிற்கு வழங்கப்பட்டது. இத்துடன் அல்லாது வேலணையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை இனம்கண்டு உதவிடும் நோக்கில் ஓர் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட்டு வேலணைக்கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வேலணையில் இயங்கும் எம் கிளைச் சங்கத்திடம் இவ்விண்ணப்பப் படிவங்கள் பாகு பாடில்லாமல் வேலணையில் எல்லா வட்டார மக்களையும் உள்வாங்கி எமக்கு நிரப்பி அனுப்பபப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இத்துடன் அல்லாது இங்கு வாழுகின்ற நம் மக்களையும் - நம் இளைய தலைமுறையினைரையும் நாம் ஒன்றிணைத்து வருடம் இரு நிகழ்வுகளை நடாத்துகின்றோம். இந்நிகழ்வுகள் மூலம் எம் இளையோரின் கலை உணர்விற்கு நாம் வழி அமைத்துக் கொடுப்பதோடு அவர்களுக்கு நம் கலை பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை அறிந்திட வாய்ப்பும் கொடுக்கின்றோம்.

இவ்வகையில் ஒன்றியத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளிற்கும் திட்டங்களிற்கும் நீங்கள் ஒத்துழைத்து உதவிட வேண்டுமென உங்களிடம் ஓர் அன்பான வேண்டுகோளையும் விடுக்கின்றோம்.

வேலணை ஒன்றியம் - பிரித்தானியா சிறப்புடன் செயலாற்றி பயனுள்ள உதவிகளை புலத்திலும் - இங்கும் நம் வேலைணையூர் மக்களிற்குச் செய்திட வாழ்த்துகின்றேன்.

"எம் ஊரின் அபிவிருத்தியினூடே
எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்"

தலைவர்,
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
22.04.014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காலத்தின் தேவை அறிந்து செய்யும் உதவிகள் யாவும் ஞாலத்தை வெல்லும்

புலம்பெயர் வாழ் வேலணை சமூகத்தின் ஒன்றியம் பிரித்தானியாவில் ஆரம்பித்து இன்றுடன் ஓர் அகவை நிறைவுசெய்தமையிட்டு வேலணை சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை சார்பாக வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பேருவகை அடைகிறேன்.

தன் குடும்பத்தைத் தாண்டி, தன் சமூகமும் முன்னேற வேண்டும், வளம் பெற வேண்டும் என்ற நன்நோக்கில் அன்புடனும், பண்புடனும், நட்புடனும் ஒன்று சேர்ந்த பிரித்தானிய வேலணை ஒன்றியத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் முதற்கண் மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும். போருக்குப் பின்னரான எமது வேலணை மண்ணில், மக்கள் வறுமையும், வெறுமையுமாய் வாழும் இந்நிலையில் வெளிநாடுகளில் வாழும் உங்களைப் போன்றவர்களின் உதவி நடக்க முடியாமல் தவிக்கும் ஒருவனுக்கு ஒரு ஊன்றுகோலாய் அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. பண்டிகைக்கால உதவிகளைத் தாண்டி, எமது வேலணை மண்ணின் இளஞ்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உங்களைப் போன்றவர்களின் உதவி கைகொடுக்கும் என நம்புகிறேன்.

நெல்லுக்கிறைத்த நீர்
வாய்க்கால் வழியோடி
புல்லுக்குமாங்கே பொசியுமாம்
தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல்
அவர்பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை

ஔவையார் அருளிச்செய்ததை உணர்த்தி நிற்கும் வேலணை ஒன்றியத்தின் தலைவர் வேந்தனார் இளஞ்சேய் அவர்களுக்கும், அவர் சார்ந்த அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும். மேலும் 'எம் ஊரின் அபிவிருத்தியினூடு எம் ஊரவரின் உயர்வுக்கு வழியமைப்போம்' என்ற உங்கள் நோக்கு நிறைவேற, உள்ளூரில் வாழும் அனைவரும் என்றும் கைகொடுப்போம்.

வாழ்த்துவோன்,
க.இளங்கோவன்
தலைவர் - வேலணை சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை

---

## நல் வாழ்த்து

வேலணை வாழ் மக்களின் வேதனையை போக்க எண்ணும்
வேந்தனார் மைந்தனோடு சேர்ந்திருக்கும் எம் உறவே!
சாதனைகள் செய்வதற்கும் சரித்திரம் படைப்பதற்கும்
பணம் மட்டும் தேவையில்லை நல்மனம் இருக்கே அதுபோதும்

சிறு துளியாய் சேமித்து சீராக வாழும் போதும்
ஒரு கணம் உம் உறவை எண்ணி
உதவமனம் கொண்டுள்ளீர்
பல துளிகள் சேரட்டும் பாவப்பட்டோர் வாழட்டும்

வாழிய உம் நல் எண்ணம்
வளர்ந்திடட்டும் உம் செல்வம்
ஆழிசூழ் உலக மெங்கும்
அறியட்டும் வேலணை பிரித்தானிய ஒன்றியம் புகழ்

**வேலுப்பிள்ளை தவனேசன்**
செயற்குழு உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஒன்றியம் பிரித்தானியா
# செயலாளரின் வாழ்த்து...!

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது- திருமறை

அன்புடையீர்...!

நாம் அனைவரும் வேலணைத் தாய் மண்ணின் பிள்ளைகள் என்ற உரிமையுடன் ஒற்றுமையுடன் கரமிணைத்து வாழவேண்டியதும். எமது மண்ணின் மைந்தர்களாக அங்குவாழும் எமது உறவுகளின் சிந்தனையோடு, அவர்களுக்கான செயல்பாட்டோடு, அவர்களின் நினைவோடு வாழவேண்டியதும் எமது கட்டாய கடமையாகும். மேற்கூறிய சிந்தனையின் செயல்பாடுகளை செயல் படுத்தவே நாம் ஒன்றிணைந்து வேலணை ஒன்றியம் என்ற பெயரில் இந்த அமைப்பை, இணைந்து உருவாக்கி அதன் மூலம் எமது கடமையை செயல் படுத்தி வருகின்றோம். என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே...

ஓராண்டையே எட்டி நடைபயிலும் எமது ஒன்றியம் எம்மால் இயன்ற வரை எமது பணியை ஆரம்பகாலமான ஓராண்டுக்குள் மிகவும் சிறப்பாகவே செய்து முடித்துள்ளோம். இன்னும் செய்ய பல திட்டத்தோடு இருக்கின்றோம். இத்தனைக்கும் நிர்வாகிகளான, உறுப்பினர்களான உங்களின் ஒத்துழைப்பும் ஓய்வின்றிய அயராத கடின உழைப்புமே இங்கு மேலோங்கி நிற்கின்றது. நன்றிகள்.

எமது வருங்கால சந்ததியை எமது கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை தெளிவுற அறியவைத்து. எமது மொழியை, எமது இனத்தின் பாரம்பரியத்தை அறிய புரிய வைப்பதற்கான கலாச்சார விழாக்களை நடத்தி அதில் அவர்களை உள்வாங்கி உணரவைப்பதன்மூலம் நாம் நம் எதிர்கால சந்ததியை வளம்படுத்தும் வழிமுறைகளை கையாள வேண்டியது எமது பணியின் முதன்மையானதாகும்.

நம்பிறந்த மண்ணில் வாழ்ந்த மக்களுள் இலட்சம் இருந்தோர் வெளிநாடும்.பல ஆயிரம் இருந்தோர் பக்கத்து நாடும். உறவுகள் உள்ளோர் கொழும்புமாய் புலம்பெயர. கையில் எதுவுமற்ற உதவிட எவருமின்றி துயரத்தில் வாழ்ந்து துன்பத்தில் துயருறும் வறுமை என்றசிகப்புக்கோட்டை எட்டிப்பிடித்த சிலரே அங்கு வாழ்கின்றார்கள். அந்த மக்களுக்கு உதவவேண்டிய தேவை நமது கடமை..அதைத்தான் செய்கின்றோம் இன்னும் பலசெய்ய இருக்கின்றது என்பதை அங்கு எமக்கு கரம்தந்து உதவிடும் உறவுகள் தெரிவித்த வண்ணமே இருக்கின்றார்கள். அவர்களின் சிந்தனையை நாம் கேட்டறிந்து செயல்பட வேண்டிய தேவைகள் எமக்கு நிறையவே உண்டு அதைசெய்ய எம்மால் முடியும் என்ற திடமான நம்பிக்கையும் எம்மிடம் உண்டு. இதற்கான செயல்பாட்டில் அடுத்த கட்டமாக கால்பதிக்க எம்மிடையே முடியும் என்ற நம்பிக்கையும் துணிவும் ஒற்றுமையும் இன்னும் அதிகமாக அனைவருக்கும் வேண்டும்.

பெற்ற தாயும் தந்தையும் தம்பிள்ளைகளை அரவணைத்து பாராட்டி மகிழ்வது போல் நாமும் நம்மை எதிர்பார்த்து காத்திருக்கும் உறவுகளை, பிள்ளைகளின் துயரை, துன்பத்தை, பசியை, பட்டினியை தீர்த்து வைப்பது எமது கடமை என்பதை உணர்ந்து ஒற்றுமையாக இணைந்து கரம் கொடுத்து எமது ஒன்றியத்தை வளர்த்தெடுப்பதோடு எம்மிடையே வேற்றுமை அற்ற ஒற்றுமையை உருவாக்கி செயல்படவேண்டியது எமது கட்டாயகடமை எனக் கூறி உங்கள் அனைவருக்கும் வாழ்த்து உரைத்து கரமிணைத்து நிற்கின்றேன்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கின் அனைவற்கும் தாழ்வு..!
நன்றி வணக்கம்

**தி.கலைவேந்தன்**
செயலாளர்
வேலணை ஒன்றியம் பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஒன்றியம் பிரித்தானியா பொருளாளரின் வாழ்த்து...!

வேலணையில் வாழ்ந்து ஐக்கிய இராச்சியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்பிற்குரிய உறவுகளே, நீங்கள் எல்லோரும் வேலணை ஒன்றியத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்து வேலணையின் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவதைப் பார்க்கும்போது பெருமகிழ்ச்சி அடைகின்றேன். வேலணையின் உண்மை நிலையை வேலணையில் இருந்து ஒன்றியத்திற்கு அனுப்பிய செய்திகள் மூலம் நீங்கள் அறிவீர்கள்.

பொங்கல் அன்பளிப்பாக பத்து குடும்பங்களுக்கு நாங்கள் சிறுதொகை பண உதவி செய்துள்ளோம். அந்த உதவிக்கு உதவி செய்த இங்குள்ள நல்ல நெஞ்சங்களுக்கு நன்றிகள் உரித்தாகட்டும். அடுத்ததாகப் புதுவருடத்தை முன்னிட்டு நாங்கள் நல்ல நிலையில் உள்ள பாவித்த உடுப்பு வகைகளை வேலணைக்கு அனுப்பி உள்ளோம்.

அவற்றை 05.04.2014 அன்று அங்குள்ளவர்களுக்கு விநியோகம் செய்வார்கள் என்று வேலணை ஒன்றியத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுவிழா புதிய நிர்வாகக் குழு அமைப்பது மாத்திரமல்ல, ஐக்கிய இராச்சியத்தில் வாழும் உறவுகளை ஒன்றிணைப்பதும் ஆகும்.

இதுவரை வேலணை ஒன்றியம் செய்துள்ள சேவையை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். மேலும் எங்கள் சேவை மேலோங்க வேண்டுமாயின், அது உங்கள் கரங்களில் தான் தங்கி உள்ளது. ஓடி ஓடி உழைக்கணும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும் என்ற வரிகளுக்கு இணங்க, வாருங்கள் உதவிக் கரம் நீட்டுங்கள் எம் ஊரவரின் உயர்வுக்கு வழியமைப்போம்.

நன்றியுடன்
பொ. ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



24.02.13 அங்குரார்ப்பண விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்



24.02.13 அங்குரார்ப்பண விழாவில் நடந்த நிகழ்வில் ஓர் காட்சி



04.01.14 நடந்த ஒன்றுகூடலில் விளக்கேற்றல்



04.01.14 நடந்த நிகழ்வில் ஓர் காட்சி



வேலணையில் 12.01.14 அன்று கொடுக்கப்பட்ட
தைப்பொங்கல் உதவிப்பணம் நிகழ்வில் ஓர் காட்சி



வேலணையில் 12.01.14 அன்று கொடுக்கப்பட்ட
தைப்பொங்கல் உதவிப்பணம் நிகழ்வில் ஓர் காட்சி



வேலணையில் சிற்பனை முருகன் கோயிலில் வைத்து
(05.04.14) உடுப்புக்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் ஓர் காட்சி




வேலணையில் சிற்பனை முருகன் கோயிலில் வைத்து
(05.04.14) உடுப்புக்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் ஓர் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வேலணை ஒன்றியம் பிரித்தானியா என்ற தாபனம் கடந்த 24.02.2013 அன்று பிரித்தானியாவில் தொடங்கப்பட்டது. அதை அறிந்து மகிழ்வடைகின்றோம்.

அவ்வகையில் கடந்த 12.01.2014ல் வேலணையில் வாழும் பத்து குடும்பங்களுக்கு தைப்பொங்கல் கொண்டாட உதவிப்பணம் வழங்கியமை அறிந்து மகிழ்ச்சியடைந்தோம்.

இரண்டாவதாக 05.04.2014ல் சிற்பனை முருகன் ஆலயத்தில் வைத்து வறுமை நிலையில் வாடும் மக்களுக்கு உடுதுணிகள் வழங்கினார்கள்.

இவ்வொன்றியம் வருங்காலத்தில் வேலணை வாழ் மக்களுக்கு ஆக்கபூர்வமான உதவிகளை செய்யும் என திடமாக நம்பகின்றோம்.

அவர்களின் நல்நோக்கத்திற்கு சிற்பனை முருகன் அருள்பாலித்திட வேண்டி வணங்குகின்றோம்.

சிற்பனைமுருகன் ஆலய பரிபாலனசபை சார்பாக வாழ்த்துகின்றோம்.

தியாகராசா பாலச்சந்திரன்
செயலாளர்.

---

## யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலய அதிபரின் வாழ்த்துச்செய்தி

வேலணை ஒன்றியம் பிரித்தானியா அமைப்பு பிரித்தானியாவில் தொடங்கப்பட்டதையிட்டு பாடசாலைச்சமூகம் பெருமை கொள்கின்றது. வேலணையில் வாழ்கின்ற மக்களுக்கு பயன்தரக்கூடிய உதவிகளை செய்யும் நோக்கில் உங்கள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதையிட்டும் அதனால் கல்வி பயிலும் மாணவர்களும் பயன் பெறுவார்கள் என்பதையிட்டும் நாம் அகமகிழ்கின்றோம். அத்துடன் வேலணையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளைச் செய்யும் நோக்கில் வேலணையிலும் ஒரு கிளைச்சங்கத்தை அமைத்துள்ளீர்கள். அதனையிட்டும் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இவ் வாழ்வாதார உதவிகள் எமது பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் பெற்றோருக்குக்கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இவ் உதவியினால் மாணவர்களும் பயன்பெறமுடியும். உங்கள் இத்தகைய உதவிகள் தொடர்ந்திட வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

அத்தோடு 26.04.2014 அன்று நடைபெறுகின்ற ஆண்டு நிறைவு விழா சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல பெருங்குளத்து முத்துமாரியம்மனை வேண்டி வாழ்த்துகின்றோம். முதலாம்ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு வெளியிடும் விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"வாழ்க உங்கள் சேவை
வளர்க உங்கள் பணி "

அதிபர்
திருமதி.ஜெ.சிறிஸ்கந்தராசா
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒன்றியத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்

**வே**லணையின் எட்டு வட்டாரங்களிலும் வாழ்கின்ற மக்களிற்கு உதவும் நோக்குடனும் வேலணையைத் தாயகமாகக் கொண்டு இன்று புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்கின்ற மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடனும் ஆரம்பிக்கப்பட்ட "வேலணை ஒன்றியம் - பிரித்தானியா" எனும் அமைப்பானது உண்மையில் இன்றைய சூழலில் மிக அத்தியாவசியமான ஒரு முயற்சியாகவே என்னால் கருதமுடிகின்றது.

எமது மண் வாசனையையும், பண்பாடு, கலாசாரங்களையும், விழுமியங்களையும் பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழும் வேலணை மக்களின் இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள இத்தகு ஒன்றியம் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்பதற்கும் அப்பால் எமது மண்ணில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் இவ்வமைப்பு தன்னாலான பெருமுயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது வேணவா.

எமது மண்ணின் பாதுகாப்பானது மீண்டும் கேள்விக்குறியாகி வருகின்ற இக் காலகட்டத்தில் எட்டு வட்டாரங்களில் அங்குமிங்கு மாக பரந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது மக்களிடையே ஒரு விழிப்புணர்வினையும் அவர்களிடையே ஒரு தொடர்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய ஒரு தேவை இன்று உள்ளது. விவசாயமோ, மீன்பிடியோ அல்லது வேறெந்த வருமானத்தை ஈட்டும் தொழிலோ அவர்களது வாழ்வாதாரத்தின் அடிப்படையில் விவசாய நிலத்தோடு ஒட்டியோ அல்லது கடல் பிரதேசத்திற்கு அண்மையாகவோ, அவ்வத் தொழில்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கத்தக்கதாக மூன்று அல்லது நான்கு கிராமங்களில் அவர்களை ஒருமித்து வாழ வைக்கும் வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி அம்மக்களின் பாதுகாப்பிற்கான உத்தரவாதமளிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தமும் இன்றைய நிச்சயமற்ற காலகட்டத்தில் எம்மண்ணின் மக்களுக்கு தேவைப்படுகின்றது என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பெண்கள் மற்றும் இளைஞர்களின் பாதுகாப்பிற்கும் திருட்டு, வழிப்பறி மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் போன்றவற்றிலிருந்து தப்பி வாழ்வதற்கு ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் இத்திட்டம் அமைய வல்லது என்பதே எனது கருத்தாகும்.

இதற்கான வேலைத்திட்டங்களை உள்வாங்கி அதனை முன்னெடுத்துச் செல்ல "வேலணை ஒன்றியம் - பிரித்தானியா" போன்ற இத்தகு நிறுவனங்கள் முன்வரவேண்டும். இவ்வகையில், இந்த ஒன்றியத்திற்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க நாம் தயார் நிலையில் உள்ளோம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களிற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல், மீள் குடியேற்றங்களை உறுதிப்படுத்துவதோடு அவர்களது நலன்களையும் கருத்திற்கொள்ளல், எட்டுத்திக்கிலும் பரந்து வாழ்கின்ற எமது மக்களிடையே பாதுகாப்பிற்கான தொடர்பினையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்திக்கொடுக்க மேற் சொன்ன ஆலோசனைக்கு அமைய ஆவன செய்தல் என விரிந்து செல்லும் வேலைத்திட்டங்கள் இவ் ஒன்றியத்தின் நோக்கத்தினை நிறைவேற்ற வல்லனவாக அமையும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

ஒன்றியத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

**- எஸ். பி. சாமி**
தலைவர்
வேலணை முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தனி ஒருவருக்கு உணவு இல்லையேல் இந்த ஜெகத்தினை அழித்துவிடுவோம். பாரதியாரின் உணர்ச்சிக் கவி வரிகள் எம் நெஞ்சினை தொட்டு நிற்கின்றது. 1991ல் எம் மண்ணில் நிகழ்ந்த இடம்பெயர்வு எம் மக்களின் இயல்பு வாழ்க்கையை சின்னா பின்னமாக்கிவிட்டது. கிராமிய பொருளாதார வளம் அழிக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவுதான் இன்று நாம் காணும் காட்சிகள்.

அத்துடன் இயற்கையும் எம்மோடு இணைய மறுக்கின்றது. பொருத்தமில்லா வேளை மழைவீழ்ச்சி கடும் வெப்பம் மக்களை வாட்டி வதைக்கின்றது. அன்றாட வாழ்வை கடத்துவது மிகவும் கடினமாக உள்ளது. சாதாரண பெரும்பான்மை மக்களுக்கு கடும் பாலை வனத்திலும் எங்கோ ஓர் இடத்தில் நன்னீர் ஊற்று காணப்படுவது போல் எம் பிரித்தானிய உறவுகள் மனதில் உருவாகியது தான் வேலணை ஒன்றியம். மிகவும் வறுமை நிலையில் உள்ள எம் மக்களுக்கு ஏதாவது செய்து அவர்களை சற்று தூக்கி விடவேண்டும் என்ற நப்பாசையில் ஒன்றியம் இயங்கி வருகின்றது.

ஒன்றியம் தனது இரண்டாவது அகவையில் பிரவேசிக்கும் இவ்வேளையில் வாழ்த்துவதில் மனம் மிக மகிழ்கின்றது.

வாழ்க ஒன்றியத்தின் பணி

ந.ஜெகநாதன்
தலைவர்
வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
வேலணைக்கிளை.

---


## J/VELANAI CENTRAL COLLEGE
## யா/வேலணை மத்திய கல்லூரி

Phone:0213214169 Fax:0214590836 ID:1014019

Principal: Sivasamy Kirupaharan SLPS


வேலணை ஒன்றியம் - பிரித்தானியா
ஓராண்டு அகவை கலைவிழா-அகமலர் பெருவிழாவே.....

வேலணை ஒன்றியம் முடியரசில்
ஒன்று கூடி ஓராண்டு கண்டது காண்.
பாராண்டு பல்லாண்டு பணி செய்து
வான் ஓங்க உயர்ந்திடுமே!
செம்மை நெறி தேர்வு செய்து
செங்கரத்தோர் தாய் மண்ணின்
சொந்தங்களின் முகிழ்விற்கு
தோள்கொடுக்க கூடலுற்று
முதலாண்ட முறுவலுற்று கூடிடும்
கலைவிழா இனிதே இனிதே.

"இவன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையான் கண்ணே உன"
திருமொழி ஈரடியேற்று ஈராண்டில்
அடிபதிக்கும் வேலணை ஒன்றியம்
நூறாண்டு கண்டிடுமே.
ஓராண்டு நிறைவுகாண் கலைவிழா
அகமலர் பெரு விழாவே வாழ்த்துகின்றோம்.

சிவசாமி கிருபாகரன்
முதல்வர்
வேலணை மத்திய கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் | திரு திருமதி சிவநாதன் |
| அகவணக்கம் | |
| செந்தமிழ்த்தாய் வாழ்த்து | சங்கவி ஜெகதீஸ்வரன், சகானா சுரேஸ்வரன் |
| வரவேற்புரை | திரு சுந்தரம்பிள்ளை சிவசந்திரன் |
| தனி நடனம் | எலனி ஜெயகுகன் |
| செயலாளர் உரை | திரு தியாகராசா கலைவேந்தன் |
| பொருளாளர் உரை | திரு பொன்னம்பலம் சிறீதரன் |
| விசைப்பலகை | கோபிந் கணேஸ்வரன் |
| தனிநடனம் | அயினெயா கலைவேந்தன் |
| குழு நடனம் | அபிநயா கயன்ராஜ், கனிகா ஜெயந்தன், ரவிகா தீசன்<br>பிரயன் கயன்ராஜ், ரகீஸ் ஜெயந்தன் |
| பிடில் | மூகாம்பிகை சதீஸ்வரன் |
| வீணை | ஆர்ணிசா சிறீநாதன் |
| சிறப்பு விருந்தினர் உரை | திரு ராஜரட்ணம் சிவநாதன் |
| தலைமையுரை | திரு வேந்தனார் இளஞ்சேய் |
| தனிநடனம் | அபினெயா கலைவேந்தன் |
| பரதநாட்டியம் | சுவேதா சத்தியநாதன் |
| வாய்ப்பாட்டு | சகானா சுரேஸ்வரன் |
| குழு நடனம் | அயினெயா, அஸ்விதா கலைவேந்தன் |
| கௌரவிப்பு | வேலணை வர்த்தகப் பிரமுகர்கள் |
| அறிமுகம் | செயற்குழு 2014 - 15 |
| நன்றியுரை | செயலாளர் தியாகராசா கலைவேந்தன் |
| உணவு | |
| நிறைவு | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VELANAI ONRIYUM - UK 1ST YEAR ANNUAL KALAI VIZHA

## 26/04/2014 Saturday (5.30pm-10.30pm)

## Programme

| | |
|---|---|
| Lighting the Traditional Lamp | Mr & Mrs Sivanathan |
| One Minute Silence | |
| Vocal Senthamil Thai Valthu | Sangkavie Jegatheeswaran, Sahana Sureswaran |
| Welcome Speech | Mr Sundarampillai Sivachandran |
| Solo Dance "Five Five Kilachchi Five Songs" | Elani Jeyagugan |
| Speech by Secretary | Mr Thiyagarasa Kalaiventhan |
| Speech by Treasurer | Mr Ponnampalam Sritharan |
| Keyboard English Song | Gobindth Kaneshwaran |
| Keyboard Tamil Cinema Song | |
| Solo Dance "Kannodu Kaanpatheillam" | Ajeneya Kalaiventhan |
| Group Dance "Soi Soi Songs" | Abinaya Gajanrajh<br>Kaniga Jenthan<br>Raviga Theesan<br>Prajan Gajanrajh, Rakish Jenthan |
| Violin "Swarajathi,Thirupuhal" | Mukampikai Satheeswaran |
| Veena | Arrnisha Srinathan |
| Speech by Special Guest | Mr Rajaratnam Sivanathan |
| Speech by Chairperson | Mr Venthanar Ilansei |
| Solo Dance "Kueil Pattu" | Abhineya Kalaiventhan |
| Baratha Natiyam "Aadikkondar" | Suwetha Sathiyanathan |
| Vocal "Sri Guruguga & Nambi Kettavar" | Sahana Sureswaran |
| Group Dance "Kalaith Thukkie" | Ajeneya & Asvitha Kalaiventhan |
| Honouring British Velanai Business People | |
| Introducing the New Committee | |
| Vote of Thanks by Secretary | Mr Thiyagarasa Kalaiventhan |
| Dinner | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/ VELANAI CENTRAL COLLEGE

OLD STUDENT 'S ASSOCIATION-UK
16 HOLLAND PARK AVENUE, ILFORD, ESSEX IG38JR

## வேலணை மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்கம் - பிரித்தானியா

**Patrons**
Dr.Siva Aathithan
Mr. A. Kantharuban
Mr. S Kanagasabapathy
Mr B Ehannantharajah
Mr K. Ganesalingam

**President:**
Mr. K.N .Sivarajah

**Vice president:**
Mr .K. Nageswaran

**Secretary:**
Mr. K. Rajeswaran

**Asst.secretary:**
Mr.K.Janagan

**Treasurer**
Mr.T. Maheswaran

**Auditor**
Mr.P. Sritharan

**Committee Members:**
Mrs A. Sivanesanathan
Mrs J Raveendran
Mrs. J.Sivakumaran
Mr.A.Charvanathan
Mr. B.Surendran
Mr.K.Thavan Ilango
Mr.S,Kulasabanathan
Mr.T.Sivapalan
Mr.A.Nothanarajah
Mr.A.Jeyakugan
Mr.R.Sivathas
Mr.V.Yoganathan
Mr.S.Sugarajan
Mr. P Satheeswaran

Date - 05/04/14

வேலணை ஒன்றியம் பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்டு முதலாம் ஆண்டு நிறைவு விழாவினைக் காண்கின்ற இவ்வேளையில் இவ்வொன்றியத்தின் சேவைகள் வேலணை என்ற அந்த அழகிய கிராமத்தில் பரந்துபட்டு வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துவதோடு இச்சங்கத்தை பிரித்தானியாவில் உருவாக்குவதற்கு எம்மோடு முன்னின்று உழைத்த எட்டு உறுப்பினர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

பிரித்தானியாவில் இதைப்போன்ற கிராமத்து நலன்புரிச் சங்கங்கள் பல இயங்கி வருகின்றன அந்த வகையில் எங்களுக்கும் இச்சங்கம் கிடைத்ததையிட்டு ஊர் உறவுகளுடன் நாங்களும் பெருமையடைகின்றோம். அத்துடன் ஊரவர்களின் எதிர்பார்புகள் வருடாவருடம் தொடர்ந்தும் நல்லமுறையில் செயற்படும் என நம்புகின்றோம்.

இவ்விழா சிறப்புற நடைபெற எமது கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| கே.என்.சிவராஜா | க.இராஜேஸ்வரன் |

Email : vccollegeuk@gmail.com Tel: 0208 599 4745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE CENTRAL DE VELANAI (ASSECVEL)

## வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்

31.03.2014

**வாழ்த்துகின்றோம் !**

வேலணை வாழ் அனைத்து மக்களையும் மையப்படுத்தி அவர்தம் வாழ்வுதனை மேம்படுத்துவதில், வேலணையின் புலம்பெயர்ந்த மக்களும் அக்கறையுடன் உள்ளனர். இதனை எடுத்துக்காட்டு முகமாக வேலணை ஒன்றியம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதே முதலில் வேலணை சார்ந்த வெவ்வேறு குழுமங்களாக இயங்கிவரும் அனைத்து அமைப்புக்களுக்கும் ஓர் பேருவகையான செய்தியாகும். தனித்தனிக் குழு அமைப்புக்களைக் கடந்து வேலணை எனும் ஓர் விருட்ச அடையாளத்தின் கீழ் நாம் அனைவரும் ஒன்றுபட முடியும் என்பதை நிகழ்தரிசனமாக எடுத்துக் காட்டி நிற்கும் வேலணை ஒன்றியத்திற்கு முதலில் எமது தலை சாய்ந்த வணக்கங்களும் வாழ்த்துக்களும்.

ஓராண்டு எனும் இச்சிறு காலப்பகுதியிலும் ஒன்றியம் தனது நோக்கங்களை அடையும் நோக்கில் சிறு சிறு திட்டங்களேயாயினும் திடமாகத் தன் காலடியினை எடுத்து வைத்திருக்கின்றது என்பது மகிழ்ச்சியான வரவேற்புடைய விடயமே. மக்களின் வாழ்வும் அவர் வாழ்விடத்தின் உயர்வும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புவதென்பது மக்களின் வாழ்வியலில் உயர்ச்சியைக் கொண்டுவரும். வேலணை ஒன்றியம் தன் எதிர்காலத்திட்டமிடலில் இவைகளை எல்லாம் ஆராய்ந்து எம் மக்கள் பயனுறுவகையில் நற்றிட்டங்கள் பலவற்றையும் நடைமுறைப்படுத்த அனைத்து வேலணை மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

ஒன்றியத்தின் வளர்ச்சிக்கும் அதன் செயற்றிட்டங்களுக்கும் எமது வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் என்றென்றும் துணை நிற்கும். செப்பனிடப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டங்களோடு வேலணை ஒன்றியம் சிறப்புற இயங்க வாழ்த்துகிறோம்.

'பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்குங் கயிறு' - குறள்
காலம் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுதல், அந்த நற்செயலின் வெற்றியை நழுவவிடாமல்
கட்டிப்பிணைக்கும் கயிறாக அமையும்.

வாழ்த்துக்கள்

வேலணை ப.மா.ச. சார்பாக
**செ. ஸ்ரீபாஸ்கரன்**
**(தலைவர்)**

73, Rue Doudeauville - 75018 Paris, France - Tél.: 01 42 51 29 92 - Fax: 01 42 51 35 25
Association enregistrée sous la Loi 1901 - N° d'ordre: 93 / 0949

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணையின் வளர்ச்சியில் குடிசைத்தொழில்கள்

எமது கிராம மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலையே நம்பி வாழவேண்டியுள்ளது. இயற்கையின் கொடுமையால் வேளாண்மை தற்போது உழவர்களுக்குப் போதிய வசதிகளைக் கொடுப்பதாய் இல்லை. இதனால் கிராம மக்கள் தம் ஊரில் பிழைப்புக்கு வழி இல்லாததால் நகரத்தை நோக்கி வருவது அதிகமாகிவிட்டது. மூட்டை தூக்கிப் பிழைத்தாலும் கட்டிட வேலை செய்து பிழைத்தாலும் பரவாயில்லை என்று நினைப்பவர் ஏராளம். "கெட்டும் பட்டணம் சேர்" என்ற புதுமொழியும் படைத்துவிட்டனர்.

அதற்கு முதன்மையாகச் செய்யவேண்டியது வேளாண்மைக்குரிய வாய்ப்புக்களைப் பெருக்குவதாகும். முதலில் நீர் தேவை. இதற்காக எமது குளங்களைப் புனரமைக்க வேண்டும். வீதிகள் தோறும் மரங்கள் நாட்டப்படவேண்டும். வேம்பு புளி போன்ற மரங்கள் எந்தக்காலநிலையிலும் வளரக்கூடியவை. இதற்கான ஊக்குவிப்புத் தேவை. அடுத்துக் கிராமங்களிலிருந்து மக்கள் நகரத்திற்கு வராது தடுக்க வேண்டும். இதற்காக மருத்துவ வசதி குடிநீர் வசதி கல்வி வசதி போன்றவைகளைச் செய்து உதவ வேண்டும். மேலும் விவசாயிகள் தமது ஓய்வு நேரத்தில் வருவாயைப் பெருக்கக்கூடிய குடிசைத்தொழில்களை அதிகமாக ஏற்படுத்தித் தரவேண்டும்.

விவசாயத் தொழில் ஆண்டு முழுவதும் நடைபெறாது. ஆண்டின் ஆறு மாதங்கள் உழைத்தும் எஞ்சிய ஆறு மாதங்கள் உழைப்பின்றியும் காலத்தை வீணாகக் கழிக்க வேண்டியுள்ளது. அப்போது குடிசைத்தொழில்கள் புரிந்தால் அது கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவும். அத்துடன் வீட்டில் பொருள்நிலை உயரவும் வழிவகுக்கும்..

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" என்ற

நாமக்கல்லாரின் கருத்து அனைவரும் போற்றவேண்டியதாகும். ஜப்பான் ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கக் காரணம் குடிசைத்தொழிலைப் போற்றியமையாகும். கடிகாரத்திற்குத் தேவையான பல சிறு உறுப்புக்களைத் தமது வீடுகளிலேயே மின்னாற்றல் கொண்டு தயாரிக்கின்றாரகள்.

பண்டைக்காலந்தொட்டு நமது பிரதேசத்தில் குடிசைத்தொழில்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. நூல் நூற்றல் ஆடை செய்தல் பாய் பின்னுதல் கூடைகள் முடைதல் கைவினை அழகுப்பொருட்கள் செய்தல் ஊதுவத்தி செய்தல் மெழுகுவர்த்தி செய்தல் காகித உறைகள் தயாரித்தல் முதலிய குடிசைத்தொழில்கள் வேலணையில் செய்யப்பட்டு வந்தன. ஆனால் அவை போதியளவு வளர்ச்சியுறவில்லை. மேலும் இவை வளர்ச்சியடையத் தங்கள் அமைப்பு அங்குள்ள மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். தங்களது பொருளாதார உதவியினாலும் அங்குள்ள வங்கிகளில் சிறுகடன் வாங்குவதினாலும் எமது வேலணைக்கிராமத்தில் இத்தொழில்கள் தங்களால் ஊக்குவிக்கப்பட்டால் எதிர்காலத்தில் மக்களின் வருவாய் அதிகரிப்பதோடு அவர்களது பொருளாதார சுகாதார நிலைகள் உயரும். கல்வியின்மை நீங்கும். இதனால் பசியும் பிணியும் பகைமையும் அற்ற பிரதேசமாக எமது கிராமம் மாறுவதற்கு வேலணை ஒன்றியத்தினருடன் இணைந்து எல்லோரும் இனிதே உழைக்க வேண்டும்.

எமது மண்ணின் பெருமைமிக்க மைந்தர்களில் ஒருவரான கவிமன்னன் வேந்தனாரின் பேர் சொல்லும் பிள்ளை இளஞ்சேய் வேந்தனார் தலைமையில் நடைபெறும் லண்டன் வேலணை ஒன்றியத்தின் முதலாமாண்டு சிறப்பு விழா வெற்றிப்பெரு விழாவாக மிளிர எனது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மகிழ்வுடன்

**சி. இளஞ்செழியன்** B. Sc (Jaffna), B. Eng (Canada)
தலைவர்
வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

حلال

ZAMS Peri Peri

Peri Peri / Fried Chicken & Pizza's

**Tel: 020 82006001**

207 - 209 Edgware Road
Colindale London
NW9 6LP
United Kingdom



**Opening Hours:**
**Open 7 days a week: 9:30am Till late**

**Free Delivery on all orders over £10, within a 4 mile radius.**

JUST EAT

MasterCard VISA Electron VISA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WINE MART

**SPIRIT** **WINE** **BEER**

**FINE WINE SPECIALIST**
**EXTENSIVE WINE RANGE**
**PARTY PLANNING**
**FREE GLASSES LOAN**
**FREE DELIVERY**
**SALE OR RETURN**
**ATTRACTIVE QUQLITY DISCOVER**
**EXTENDED OPENING HOURS**

# HN & WM LTD

**WINE MART**
183 ASHBURNHAM ROAD
HAM
SURREY
TW10 7NR
**0208 8481860**
WINEMART@BTCONNECT.COM

**LONDIS**
1086 UXBRIDGEROAD
HAYES
MIDDX
UB4 0RJ
**0208 573 0645**
HNWMLTD@YAHOO.CO.UK

**LONDIS**
5 HOLMESDALE ROAD
REIGATE
SURREY
RH2 0BA
**01737 242942**
HNWMLTD@YAHOO.CO.UK




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMIRTHAN & SURESH SOLICITORS

**150a Ealing Road, Wembley, Middlesex, HA0 4PY**
**TEL: 020 8903 7211 | FAX: 020 8795 4056**

**We offer a friendly service in the following areas of law:**

- ❑ Commercial Conveyancing
- ❑ Residential Conveyancing
- ❑ Immigration & Nationality
- ❑ Liquor Licensing
- ❑ Landlord & Tenant Matters
- ❑ Divorce & Family Matters

**Partners:** Mr Amirthan Rajakariar
Mrs Pawaleswary Suresh

**Solicitors:** Mr Chris Ebhote
Mrs Chindu Gajanrajh (079 580 10816)

We pride ourselves in being able to provide a professional and understanding service for our clients and very much believe that the "old fashioned" concept of having a firm of solicitors undertake all legal work for the family is still highly appropriate in modern times, where a friendly ear can sometimes be needed.

*With Compliments From:*

# REDBRIDGE 3D TUITION CENTRE

**Redbridge, Ilford**

## Key Stage 2, 3, GCSE/IGCSE
## AS and A2 Levels Mathematics
### (Including Mechanics and Statistics)

**By Qualified & Experienced Teacher with proven records**
**Small Groups, One to One Attention**

## P Sritharan B Sc (Hons), M Sc (UK), PGCE
## 077 467 233 98

**Email: redbridge3dtuitioncentre@gmail.com**

### Qualification for Admission:

**You should have 3D's: Discipline, Dedication and Desire to Learn!!!**
**Boost your child's potential and confidence in Mathematics.**
**(Education is an Asset that cannot be destroyed by any means.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VO-UK Members (2013-15)

1. Mr Venthanar Ilansei
2. Mrs K Ilansei
3. Mr I Ilansei
4. Mr V Ilansei (Junior)
5. MrKalaiventhan Thiyagarasa
6. Mrs N Kalaiventhan
7. Mr Ponnampalam Sritharan
8. Mrs N Sritharan
9. Miss K Sritharan
10. Miss N Sritharan
11. Mr Sundrampillai Sivachandran
12. Mrs Puvaneswary Sivachandran
13. Mr Saran Sivachandran
14. Miss Sophie Sivachandran
15. Mr Kandiah Rajeswaran
16. Mr Thampiiya Sivapalan
17. Mr Nakaiya Visakan
18. Mrs R Visakan
19. Miss J Visakan
20. Miss S Visakan
21. Mr T Visakan
22. Mrs Ambikai Sivanesanathan
23. Mr Wajieran Sivanesanathan
24. Miss Prayagha Sivanesanathan
25. Mr Nadaraja Sivaraja
26. Mr Murugesu Ratnavel
27. Mr Kumarasamy Sivakumar
28. Mrs J Sivakumar
29. Miss S Sivakumar
30. Mr Arulrajah Paranjothi
31. Mrs Pathmawathy Arulrajah
32. Mr Thierry Arulrajah
33. Mr Jean Arulrajah
34. Mr Kevin Arulrajah
35. Mr Velupillai Thavanesan
36. Mrs S Thavanesan
37. Mr Thavawaran Thavanesan
38. Mr Thavaranjan Thavanesan
39. Mr Thavaruban Thavanesan
40. Mr Apputhurai Nothanarajah
41. Mrs Chindu Gajanrajah
42. Mr Gajanrajah
43. Mrs Maliikadevi Thuraisingam
44. Mr Tjuraisingam Kesarasingam
45. Mr Somasundram Indralingam
46. Mrs Somasundram
47. Mr Arumugam Gobi
48. Mrs Sutha Gobi
49. Mr Kandasamy Theesan
50. Mrs S Theesan
51. Mr Muthiah Kandasamy
52. Mrs P Kandasamy
53. Mr K Kandasamy
54. Mr S Kandasamy
55. Mr Thiruvilankam Thilipkumar
56. Mrs S Thilipkumar
57. Mrs Mangaleswary Sriskandarajah
58. Mr Rajalingam Moharalingam
59. Mrs S Manoharalingam
60. Mr A Manoharalingam
61. Mr Manoharalingam
62. Mr Sivalingam Navaranjan
63. Mrs R Navaranjan
64. Mr Kanagu Subaskaran
65. Mrs J Subaskaran
66. Mr Gnanachandran Paranirubasingham
67. Miss Sandhya Das
68. Miss Vanathy Balakrishna
69. Mr Kanagaratnam Sivanathan
70. Mrs M Sivanathan
71. Mr Kanagaratnam Gnanakumar
72. Mr Satheeswaran Chandrasegaram
73. Mr Sathees Kanapathipillai
74. Mr Sutha Jeevakumar
75. Mr Velupillai Muralitharan
76. Mrs V Muralitharan
77. Mr Rajalingham Sithamparalingam
78. Mrs V Sithamparalingam
79. Mr Arudsivam Sathasivam
80. Mrs T Sathasivam
81. Mr Nagalingam Arulan
82. Mrs K Arulan
83. Mr Jeva Arulan
84. Miss Jevita Arulan
85. Mr Jevan Arulan
86. Mr Pararajasingam Jagatheesvaran
87. Mrs M Jagatheesvaran
88. Mr Pararajasingam Sureswaran
89. Mrs J Sureswaran
90. Mr Pararajasingam Jeyarajasegaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. Mrs A Jeyarajasegaran
92. Mr Pararajasingam Satheeswaran
93. Mrs Y Satheeswaran
94. Mr Ponnappa Pararajasingam
95. Mrs S Pararajasinagam
96. Mr Thanapalasingam Kaneshwaran
97. Mrs S Kaneshwaran
98. Mr Pararajasingam Kasipan
99. Mrs T Kasipan
100. MrNiranjan Rajaratnam
101. Mr Rajanikanth Rajaratnam
102. Mrs Shinthany Rajanikanth
103. Mr Arulampalam Poologasundrampillai
104. Mrs V Poologasundrampillai
105. Mr Pagavathsingam Thaneswaran
106. Mrs K Thaneswaran
107. Mr Perinpanayagam Vijeyaruban
108. Mrs S Vijeyaruban
109. Mr Kathiravelu Jenthan
110. Mr Kugapiriyan Ramachandran
111. Mr Athiparan Vinayagamoorthy
112. Mr Vijay Vijayakumar
113. Mr Amirthalingam Jeyagugan
114. Mrs S Jeyagugan
115. Mr Amirthalingam Subaskaran
116. Mr Kumarasamy Sutharsan
117. Mr Sellathurai Satheesan
118. Mrs M Satheesan
119. Mr Ambigavathy Vamanan
120. Mrs Suganthi Vamanan
121. Mr Pulenthirajah Stephen
122. Mrs Sivagowry Stephen
123. Mr Tharmarasa Vijayarasa
124. Mrs T Vijayarasa
125. Mr Nadarajah Navanithan
126. Mrs S Navanithan
127. Mr Pararajasingam Parameswaran
128. Mrs V Parameswaran
129. Mrs Vimalasothy Yogarajah
130. Mr Kumarasamy Kunalan
131. Mrs Chithra Vijayakumaran
132. Mr Gnanasampanthan Gnananthan
133. Mr Balachandran Kajendran
134. Mr Kanagaratnam Sarvananthan
135. Mrs K Sarvananthan
136. Mr Visvanathan Yoganathan
137. Mrs J Yoganathan
138. Mr P Yoganathan
139. Mr S Yoganathan
140. Mr Nagaratnam Pushpanathan
141. Mrs J Pushpanathan
142. Mr G Pushpanathan
143. Mr Narajah Mohan
144. Ms Vijayalatha Vasanthakumar
145. Mr Perinpanajakam Sivasuthan
146. Mr Ganesh Jeyakumar
147. Mr Mahalingam Pongaimaran
148. Mr Kangaratnam Krishnakumar
149. Mr Nagarajah Gnanaharan
150. Mrs Vanitha Gnanaharan
151. Mrs M Rajeswaran
152. Mrs A Kesarasingam
153. Mr J Navaranjan
154. Mr A Navaranjan
155. Mrs Venukesi Jenthan
156. Mrs Sivarajani Athiparan
157. Mr Sornalingam Mugunthan
158. Mr Srikaran Vinayagamoorthy
159. Mrs J Thirukumaran
160. Mrs Janaki Sitharthan
161. Mrs Nalayini Sureshkumar
162. Mr K Thirunelakandan
163. Mrs S Thirunelakandan
164. Mr Kopi Thirunelakandan
165. Miss P Thirunelakandan
166. Mrs L Pongaimaran
167. Mr S Sathiyanathan
168. Mrs M Sathiyanathan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# LONDIS

## OFF LICENCE AND CONVENIENT STORES

உங்களுக்குத் தேவையான
இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
மற்றும் மரக்கறி, பழவகைகள்,
கடலுணவு வகைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை ஒன்றியம் பிரித்தானியா - வேலணைக்கிளை செயற்குழு உறுப்பினர்கள் 2014



நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)

த.தர்மராஜேந்திரன்
பா.மதியழகன் (செயலாளர்)
திருமதி. தவமணதேவி தனபாலசிங்கம்
திருமதி. ப. பிரேமாவதி
செல்வி சி. அனுசயா

இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)

திரு இளங்கோவன் (கௌரவ விருந்தினர்)
ராஜரட்னம் சிவநாதன் (பொருளாளர்)
திரு. க. மார்க்கண்டுதாசன் (உப செயலாளர்)
நடராஜா ஜெகநாதன் (தலைவர்)
ப. அருளையா

படத்தில் இடம்பெறாதோர்

திரு. ஐ. ரதீஸ்வரன் (உப தலைவர்)
திரு. த. வேல்முருகன்
திரு. ஆ. அருமைநாயகம்
திரு. க. பஞ்சலிங்கம்
திரு. சு. அகிலன்
திரு. அ. உதயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**VELANAI ONRIYUM-UK**

**ACCOUNTS FOR THE PERIOD FROM 24.02.2013 TO 31.3.2014**

| | £ | £ | £ |
|---|---|---|---|
| **INCOME** | | | |
| Total membership fees | | | **1830.00** |
| Donation from 8 Founder Members-(For Opening Ceremony-24.2.13) | 405.00 | | |
| Donation from One Founder Member | 128.00 | 533.00 | |
| Donationfrom10 Committee Members (For Annual Gettogether-4.1.14) | 651.00 | | |
| Donation from One Founder Member/Committee Member | 100.00 | | |
| Donation from One Founder Member/Committee Member | 21.00 | 772.00 | |
| Shorteats Sales-4.1.13 | 258.00 | | |
| (Shorteats donated by 8 committee members plus 3 members) | | | |
| Thaipongal Support Fund Donation | 200.00 | 458.00 | |
| (Donated by 7 members plus 1 committee member) | | | |
| Donation from 3 Committee members | 153.00 | | |
| (For shipping cost-Used clothes to Velanai) | | | |
| Donation from 2 Committee members | 72.00 | 225.00 | |
| (For used clothes Clearing cost & Transport cost in Srilanka) | | | |
| Donated by one committee member-For VO-UK Banners | 18.00 | | |
| Donated by one committee member-for VO-UK Banners-Velanai | 18.00 | 36.00 | |
| Total Donations from Members | | | 2024.00 |
| **TOTAL RECEIPTS** | | | **3854.00** |
| **EXPENDITURE** | | | |
| Audio Sound System-Bought | 375.77 | | |
| VO-UK stamped | 15.00 | 390.77 | |
| VO-UK, Opening Ceremony exp-24.2.13 | | 533.00 | |
| Annual Gettogether Exp-4.1.14 | | 772.00 | |
| Thaipongal Support Fund send to Velanai | 453.00 | | |
| Commission paid | 5.00 | 458.00 | |
| Used Clothes-Shiping Cargo cost | 153.00 | | |
| Used Clothes customs duty and Transport cost in Srilanka | 72.00 | 225.00 | |
| VO-UK Banners -For uk | 18.00 | | |
| VO-UK Banners -For Velanai | 18.00 | 36.00 | |
| **Annual Kalaivizah cost:-(until 23.3.14)** | | | |
| Hall Hire-Refundable Deposit -paid | 150.00 | | |
| Hall Hire cost-paid | 317.00 | | |
| Postage cost paid-upto 23.3.14 | 32.00 | 499.00 | |
| **TOTAL EXPENDITURE** | | | **2913.77** |
| **BALANCE AS AT 31.03.14** | | | **940.23** |
| **BALANCE AS PER BANK STATEMENTS AS AT 31.03.14** | | | **940.23** |

Prepared By:-
Mr P Sritharan
Treasurer

Reviewd By:-
Mr V Ilansei
Chairperson

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது இன்றைய விழா சிறப்புற நடந்திட எமக்கு உதவிட்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சிறப்பாக எமது விழா மலருக்கு விளம்பரங்கள் தந்துதவிய பிரித்தானியா வாழ் வேலணை வர்த்தகப் பெருமக்களிற்கும், எமது வேண்டுகோளை ஏற்று விழா மலருக்கு ஆக்கங்கள் தந்து சிறப்பித்த அன்பர்களிற்கும், இன்றைய விழாவிற்கான சிற்றுண்டி வகைகளை செய்து தந்துதவி செய்திட்ட எம் ஒன்றியத்தின் அங்கத்தவர்களிற்கும், எமது அழைப்பை ஏற்று கௌரவ விருந்தினராக இங்கு வருகை தந்துள்ள எம் வேலணைக்கிளையின் பொருளாளரான திரு. ராயரட்ணம் சிவநாதன், அவர் தம் துணைவியார் திருமதி சிவநாதன் ஆகியோருக்கும், எமது கடந்தகால செயற்பாடுகளில் பல வகைகளிலும் உதவி புரிந்திட்ட எம் செயற்குழு உறுப்பினர்களிற்கும் அவர்கள் குடும்பத்தினர்களுக்கும், விழா மலரை சிறப்பாக அச்சிட்டுள்ள JR Print உரிமையாளர் திரு பாலரவி அவர்களுக்கும் அவர்தம் ஊழியர்களுக்கும், சுவையான உணவைத் தயாரித்து வழங்கிய ASA Food உரிமையாளர் திரு மோகன் அவர்களுக்கும் மற்றும் பலவகைகளிலும் எமக்கு ஆலோசனையும் ஆதரவும் தந்திட்ட அனைத்து அன்புள்ளங்களிற்கும் எம் ஒன்றியத்தின் சார்பாக எங்கள் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

**எம் ஊரின் அபிவிருத்தியினூடே**
**எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KRISHNA

| | |
|---|---|
| Btm / Niru / Suryaa Tin Fish | - £1.99 |
| Niru Red Raw / Oorkuthu aarisi 1 kg | - £1.99 |
| Niru : Mottakarupan Arisi / Oorkuthu Arisi 5kg | - £8.99 |
| Thirumahal: Mottakarupan Arisi / Oorkuthu Arisi / Ponni Arisi 5kg | - £7.99 |
| Suryaa Wheat Flour / Rus c Rice Flour 5kg | - £10.99 |
| Jay Brand Rice Flour / Steam Flour 3.6kg | - £7.99 |
| Suryaa all Flour Items 1kg | - £1.99 |
| Thirumahal / Annakottai Nallanai | -£5.99 |
| Parotas | - 99p |
| Idayam Oil 1 litre | - £5.99 |
| TRS / Natco Red Lentils 2kg | - £3.49 |

**BUY 1 GET FREE**

**SPECIAL PRICE**

| | |
|---|---|
| Suryaa Curry Powder 900g | - £3.99 |
| Kings Curry Powder 900g | - £3.99 |
| Rabeena Curry Powder 900g | - £3.79 |
| Leela Curry Powder 900g | - £3.79 |
| Maggi Coconut Powder 1kg | - £4.99 |
| Keerai Items | - £2.99 /Kg |
| Small Onion / Aubergine | - £1.99 /Kg |
| Niru / Yalee / Diamond; Frozen Fish | - 2 for £5.50 |
| Easy Cook Rice 5kg | - £3.99 |
| Apna Basmati 20kg | - £15.99 |
| Tilda Basmati Rice 20 kg | - £31.99 |

**FISH ITEMS**

| | |
|---|---|
| Villa mean | - £6.99 |
| Seela | - £6.99 |
| Thirukkai | - £6.99 |
| Thiralli | - £6.99 |
| Mackerel | - £6.99 |
| Otti | - £6.99 |
| Parai | - £7.99 |
| Tuna | - £7.99 |
| Nandu | - £8.99 |
| Prawns | - £8.99 |
| Kanavaa | - £8.99 |
| King Fish | - £11.99 |

**MEAT ITEMS**

| | |
|---|---|
| Attu Kudal | - £1.50 each |
| Chicken Drumstick | - £2.99/kg |
| Pangu Eerachi | - £4.99 |
| 3 x baby Chicken | - £5.99 |
| Mutton Chop Back | - £6.99/kg |
| Chicken Wings | - £1.49/kg |
| Whole Sheep | - £4.49 |
| Whole Lamb | - £5.99 |
| Mutton Shoulder | - £6.99/kg |
| Mutton Leg | - £7.99/kg |

**MANN / MUYAL / MARAI ERACHCHI AVAILABLE EVERY WEEK**

**OVER 300 items on SPECIAL OFFER in Store**

**Offer Ending 31st OF AUGUST 2014**

## Tel: 0208 848 1250

**704-708 Uxbridge Road,**
**Hayes UB4 0RX**

Email: info@krishnacashandcarry.co
Web: www.krishnacashcarry.co

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print Tel: 020 8503 6643 www.jrprint.com